தினமலர்

நிறுவனர் டி.வி. இராமசுப்பையர்

# ஹிந்தி ஆலோசனை குழு 'வேல்ஸ்' வேந்தருக்கு இடம்

**சென்னை, ஆக. 20–** மத்திய அரசின், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தின், ஆலோசனை குழுவில், வேல்ஸ் பல்கலை வேந்தர், உறுப்பினராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

மத்திய அரசின், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகத்தால், 'ஹிந்தி ஆலோசனை குழு' அமைக்கப்பட்டு உள்ளது.

இக்குழுவின் தலைவராக, துறையின் அமைச்சர், ஸ்மிருதி இரானி நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், லோக்சபா மற்றும் ராஜ்யசபா உறுப்பினர்கள், மத்திய அமைச்சக செயலர்கள் மற்றும் இணை செயலர்கள் உட்பட, 30 பேர், இந்த குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இதில், தமிழகத்தில் இருந்து, சென்னை, பல்லாவரத்தில் உள்ள, வேல்ஸ் பல்கலையின் வேந்தர், ஐசரி கணேஷ் உறுப்பினராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

இதன் வாயிலாக, பல ஆண்டுகளுக்கு பின், 'ஹிந்தி ஆலோசனைக் குழுவில்' தமிழகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.